*கவனிக்க.- 2015.09.11 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1933 - 2015 සැප්තැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2015.09.18

*1933 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 659 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 658 | | |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# அரசாங்க அறிவித்தல்கள்

## *1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, கடன் இணக்கக் கட்டளைச் சட்டம்*

*25 ஆம், 26 ஆம் பிரிவுகளின் கீழ் அறிவித்தல்*

*1941 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினாலும் 1959 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் கட்டளைச் சட்டத்தினாலும், 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1973 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ், பின்வரும் அட்டவணையில் உள்ள விண்ணப்பத்திற்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள கடன் கொடுத்தவருக்கும் கடனாளிக்கும் இடையில் இணக்கமொன்றினை ஏற்படுத்தும் முயற்சியை மேற்கொள்ள கடன் இணக்க சபை உத்தேசித்துள்ளது.*

*2. ஆதலின், சம்பந்தப்பட்ட கடன் கொடுத்தவர்கள், சபையின் முன் தோற்றுமாறு அவர்கள் தேவைப்படுத்தப்பட்ட திகதிக்கு முன்னர் கீழ்க் கண்ட கடனாளிகளிடமிருந்து தங்களுக்கு வருமதியாகவுள்ள கடன்களின் விவரங்களை சபைக்கு கொடுத்துதவுமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 25(1), 26(1) ஆகிய பிரிவுகளினது நியதிகளின்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

ரீ. கே. ரத்னசூரிய,
செயலாளர் (பதில்),
கடன் இணக்க சபைத் திணைக்களம்.

கடன் இணக்க சபைத் திணைக்களம்,
இல. 35A, கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை,
கொழும்பு 8.
2015,செத்தெம்பர் 09.

**அட்டவணை**

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|
| (1) 43537 | திருமதி ஜயசிங்க ஆரச்சிலாகே வேர்ஜினியா ஆன் நிலந்தி பெரேரா, ''நொயெலா'', இல 22/ஏ, மே/நயினமடம, நயினமடம. | திரு. சக்கரவர்திகே, கிறிஷாந்த கமல் பெர்னாந்து, இல. 28, ரோஷன் மாவத்தை, 3 ஆம் குறண, நீர்கொழும்பு. |
| (2) 43547 | திருமதி பகலகே சுமணாவதீ, இல.62, தவட்டகஹவத்த, ஹல்பிட்ட, பொல்கஸ்ஓவிட்ட. | திரு. சோமசிறி எல்விட்டிகல, இல. 63/8, ஸ்ரீ தேவானந்த வீதி, தும்போவில, பிலியந்தல. |
| (3) 43522 | திருமதி சிங்கபுரகே நிர்மலா சுதர்ஷனி, இல. 48/2, பல்லேகம, பெப்பிலியவல. | திரு. மனமால முதியன்சேலாகே நிரோஷ், இல. 212/5, மாகொல தெற்கு, மாகொல. |
| (4) 43461 | திரு. மிஹிந்து குலசூரிய அன்ரனி கீர்த்திசிறி, பெர்னாந்து, இல.119, செல்பி வீதி, குட்டிதூவ, நீர்கொழும்பு. | திரு. உடுகம்பொலகே சுராஜ் ஜானக பர்னாந்து, இல. 285, சுபசாதக மாவத்தை, தளுவக்கொட்டுவ, கொச்சிக்கடை. |
| (5) 43633 | திரு. ஆசிரி நந்தகே தர்ஷன தரங்க ஜயதிலக, ''தரங்க விலா'', சியம்பலாவெஹெர, கொகரெல்ல. | திருமதி முதுகல உபனந்தகே சியாமலீ உபனநந்த, திக்கலவத்த, தித்தெனிய. |

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|
| (6) 43160 | திருமதி கமனீ சுவர்ணலதா லியனகே, இல. 115, மக ஹீனெட்டியகல, களுத்துறை தெற்கு, களுத்துறை. | 1. திரு. பலாமுனிகே தமித் தனஞ்சய த சில்வா, இல. 303பி, மகஹீனெட்டியகல, களுத்துறை தெற்கு. 2. திரு.ஹெட்டிஆரச்சிகே தொன் சானக்க சமீர, ஜயசேகர, கோசல மாவத்தை, நாகொடை, களுத்துறை. |
| (7) 43545 | திரு. லியனகே பிரியவங்ச பெரேரா, இல. 852, "பிரியா வாச", கட்டுபிலகொல்ல, தொடம்கஸ்லந்த. | திருமதி துலா தேவயலாகே தமரா சாந்தனீ குமாரி, பகலவெல, தொடம்கஸ்லந்த. |
| (8) 43576 | திரு. மொகம்மது ஜுனைது மொகம்மது அயூப், கல்உஸ்ஸ, மடிகெ மிதியால, பண்டார கொஸ்வத்த. | திரு. வீரசிங்க முதியன்சேலாகே கருணாரத்ன, கல்உஸ்ஸ, மடிகெ மிதியால, பண்டார கொஸ்வத்த. |
| (9) 43554 | திரு. மாரசிங்க அச்சில்லாகே டிங்கிரிபண்டா கபுகொட்டுவ, இல. ஏ/46, அம்பவல, ஹெட்டிமுல்ல. | திரு. மாரசிங்க ஆரச்சிலாகே சமன் மாரசிங்க, அட்டலாஹேன, மினுவன்கமுவ, ஹெட்டிமுல்ல, கேகாலை. |
| (10) 43582 | திரு. பனாவென்னகே மில்ரன் பெர்னாந்து, இல 227/பி, வல்பிட்ட, பட்டவல, பாதுக்க. | திருமதி தெனிப்பிட்டிய ஆரச்சிகே சாந்தனீ, இல. 46/1, "செனசும", அத்துருகிரிய. |

9-464

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கிளை : கல்முனை
வாடிக்கையாளரின் பெயர் : அருணாசலம் லவகுமார் மற்றும் அரசரட்னம் சுஸ்மித்தா

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2015 ஆம் ஆண்டு யூலை 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

" அருணாசலம் லவகுமார் மற்றும் அரசரட்னம் சுஸ்மித்தா கடப்பாடு உடையவர்களாகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், கல்முனை பிரசித்த நொத்தாரிசு எம். கே.பேரின்பராஜாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, மார்ச் 02, 2007, செத்தெம்பர் 21, 2009, மாச்சு 21மற்றும் 2011, மே 23 ஆந் திகதிகள் இடப்பட்ட முறையே 429, 522, 570 மற்றும் 824 ஆகிய இலக்க முறிகள் மற்றும் கல்முனை பிரசித்த நொத்தாரிசு எம். ஐ. ஆர். ஹத்தியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, மாச்சு 28 ஆந் திகதியிடப்பட்ட 1110 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2015, மே 14 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது தொண்ணூற்று நான்கு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து எழுநூற்று பத்தொன்பது ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 94,94,719.45) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 429, 522, 570, 824 மற்றும் 1110 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட 94,94,719.45 ரூபா பணத்தொகையை 2015, மே மாதம் 15 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும்

வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''.

**அட்டவணை**

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில் உள்ள கரைவாகுப்பற்று கல்முனை - 01 இல் உள்ள ''மன்கலன்கேணி'' யின் கிழக்கு பகுதியின் பெரிய மத்திய பகுதி காணியில் இருந்து தெற்கிற்கானதும் ''3 ஆவது பிரிவு'' என அழைக்கப்படும் பகிரப்பட்ட காணி, வடக்கிலிருந்து தென் கிழக்கு பக்கத்திற்கு (55) ஐம்பத்து ஐந்து அடி மேற்கு பக்கம் (65) அறுபத்தைந்து அடி மற்றும் கிழக்கில் இருந்து மேற்கு (96) தொண்ணூற்று ஆறு அடி, அத்துடன் எல்லைகள் - வடக்கு: செல்லையா கிருபைராஜாவிற்கு சொந்தமான காணி; கிழக்கு: மூன்று அடி ; தெற்கு : எம். எச். சுபைதா உம்மா மற்றும் சுபுருல்லாவின் காணி; மேற்கு : 10 அடி ஒழுங்கை இதன் முழுவதுடனான, அத்துடனான எல்லாவற்றையும் கொண்டது. அத்துடன் கல்முனை காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் கே 151/ 209 இன்கீழ் பதிவு செய்யப்பட்டது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. சிங்கராஜாவினால் தயாரிக்கப்பட்ட 2003.05.25 ஆந் திகதியிடப்பட்ட ஏ. எஸ்./2003/ 440 ஆம் இலக்க நிலஅளவை வரைபடத்திற்கு அமைவான எல்லைகளுக்கு அமைவாக.

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை மாநகர சபை மற்றும் பிரதேச செயலாளர் எல்லைக்கு உட்பட்ட கரைவாகுப்பற்று கல்முனை - 01, யாட் வீதி, 45/2ஏ இலக்கத்தில் உள்ள ''மான்களம்கேணி'' என அழைக்கப்படும் பகிரப்பட்ட காணி இருபது தசம் எட்டு நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 20.84பே.) விஸ்தீரணத்தைக் கொண்டதுடன், அதன் எல்லைகள் - வடக்கு : சி. கிருபைராஜாவினால் உரிமை கோரப்படும தோட்டம் ; கிழக்கு : கே.தேவராஜாவினால் உரிமை கோரப்படும் தோட்டம் ; தெற்கு : பீ. ராஜகுமாரியினால் உரிமைகோரப்படும் தோட்டம்; மேற்கு : தனியார் ஒழுங்கை. இத்துடனான முழுவதுடனுமான அத்துடனுமான எல்லாம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

9- 466/1

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கிளை : கல்முனை
வாடிக்கையாளரின் பெயர் : அருணாசலம் லவகுமார் மற்றும் செல்வநாயகி அருணாசலம்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2015 ஆம் ஆண்டு யூலை 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

''அருணாசலம் லவகுமார் மற்றும் செல்வநாயகி அருணாசலம் கடப்பாடு உடையவர்களாகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், மட்டக்களப்பு பிரசித்த நொத்தாரிசு ராஜரட்னம் காயத்திரியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, செத்தெம்பர் 02 ஆந் திகதி இடப்பட்ட 689 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2015, மே 21 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஐம்பத்து ஏழு இலட்சத்து எண்பதாயிரத்து முந்நூற்று நாற்பத்தெட்டு ரூபா பதினேழு சதம் (ரூ. 57,80,348.17) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 689 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டன வுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட (57,80,348.17) ரூபா பணத்தொகையை 2015, மே மாதம் 22 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''.

**அட்டவணை**

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், கரைவாகுப்பற்று கல்முனை கிராமத்தில் உள்ள பிரிவு இலக்கம் - 1 இல் உள்ள ''கல்முனை வளவு'' என அழைக்கப்படும் காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. விஸ்வலிங்கத்தினால் தயாரிக்கப்பட்ட 1960.09.27 ஆந் திகதியிடப்பட்ட 19/ 60 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இலக்கம் 13 இன் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட மேற்குப் பகுதி காணியின் எல்லைகள் - வடக்கு: யாட் வீதி ; கிழக்கு: பீ. ராசநாயகத்தின் காணி ; தெற்கு : துரைராசா மற்றும் மனைவியின் காணி ; மேற்கு : ரீ. ராசரத்தினத்தின் காணி. அத்துடன் வடக்கில் இருந்து தெற்கு 110 அடி மற்றும் கிழக்கில் இருந்து மேற்கு 35 அடி. அத்துடன் வீடு மற்றும் சகல உரிமைகளையும் கொண்டது. கல்முனை காணிப் பதிவகத்தில் பி 11/ 125 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

மிக அண்மையில் மேல் சொல்லப்பட்ட நில அளவைக்கு அமைய மேலே குறிப்பிடப்பட்ட காணி பின்ருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை பிரதேச செயலாளர் பிரிவில் (கரவாகுப்பற்று) உள்ள கல்முனை மாநகர சபை எல்லைகக்கு உட்பட்ட கி. சே. பிரிவு இலக்கம் 1ஏ இல் உள்ள கல்முனை கிராமத்தின் யாட் வீதியில் உள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 102 ஐக் கொண்ட ''ரி. பீ. 49223'' என அழைக்கப்படும் பகிரப்பட்ட காணியின் எல்லைகள் பின்வருமாறு : வடக்கு : யாட் வீதி ; கிழக்கு: பீ. ராசநாயகத்தினால் உரிமை கோரப்படும் தோட்டம் ; தெற்கு : துரைராசா மற்றும் மனைவியினால் உரிமை கோரப்படும் தோட்டம் ; மேற்கு : ரீ. ராசரத்தினத்தினால் உரிமை கோரப்படும் தோட்டம். 0.037484 ஹெக்டேயர் அல்லது பதின்நான்கு தசம் எட்டு இரண்டு பேர்ச்

(0ஏ. 0றூ. 14.82) அத்துடன் நிரந்தர கட்டிடம் மற்றும் அத்துடனான சகல உரிமைகளையும் கொண்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

9- 466/2

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கிளை : காரைதீவு
வாடிக்கையாளரின் பெயர் : அப்துல் மஜீட் மொகமட் தஸ்லீம் மற்றும் அப்துல் மஜீட் மொகமட் ஹவ்ரத்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2015 ஆம் ஆண்டு யூலை 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

“அப்துல் மஜீட் மொகமட் தஸ்லீம் மற்றும் அப்துல் மஜீட் மொகமட் ஹவ்ரத் கடப்பாடு உடையவர்களாக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், நிந்தவூர் பிரசித்த நொத்தாரிசு அல் ஹாஜ் முத்துமீரானினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, பெப்புருவரி 09 ஆந் திகதியிடப்பட்ட 7531 ஆகிய இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2015, மே 10 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஐம்பத்தொன்பது இலட்சத்து எழுபத்தேழாயிரத்து முந்நூற்று பதின்நான்கு ரூபா எண்பத்தொரு சதம் (ரூ. 59,77,314.81) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளது.

அப்துல் மஜீட் மொகமட் தஸ்லீம் மற்றும் அப்துல் மஜீட் மொகமட் ஹவ்ரத் கடப்பாடு உடையவர்களாகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், பிரசித்த நொத்தாரிசு அல் ஹாஜ் முத்துமீரானினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, யூலை 23 மற்றும் 2012, நவெம்பர் 29 ஆந் திகதிகள் இடப்பட்ட முறையே 7674, 7382 மற்றும் 7771 ஆம் இலக்க முறிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2015, மே 10 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது தொண்ணூறு இலட்சத்து நாற்பதாயிரத்து நானூற்று தொண்ணூற்று மூன்று ரூபா எழுபது சதம் (ரூ. 90,40,493.70) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளது.

அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 7531, 7674, 7382 மற்றும் 7771 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டன வுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட 1,50,17,808.51 ரூபா பணத்தொகையை 2015, மே மாதம் 11 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர் டலாஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.”.

### முதலாவது அட்டவணை

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில் உள்ள காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மாளிகைக்காடு மேற்கு, கரைவாஹுபற்றுவில் உள்ள ‘‘கோடைப்பற்று வளவு’’ என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணி, வடக்கில் இருந்து தெற்கு 08 பாகங்கள், கிழக்கில் இருந்து மேற்கு 16 1/2 பாகங்கள், விஸ்தீரணத்தைக் கொண்டது. இதிலிருந்து பிரிக்கப்பட்டதனை தவிர்த்து மற்றும் தெற்கு மேற்கு மூலை வடக்கு - வடக்கு இல் இருந்து 10 அடி தெற்கு நோக்கி, கிழக்கில் இருந்து மேற்கிற்கு 23 அடி மிகுதியான வடக்கில் இருந்து தெற்கிற்கு கிழக்கு நோக்கிய பக்கம் 8 பாகங்கள். வடக்கின் முடிவில் இருந்து கிழக்கு பக்கத்திற்கு 08 பாகங்கள், வடக்கில் இருந்து மேற்கு நோக்கி 16 1/2 பாகங்கள், இந்த முடிவில் இருந்து தெற்கு நோக்கி 5 1/2 பாகங்கள் இதில் இருந்து கிழக்கு பக்கம் நோக்கி 23அடி. இந்த முடிவில் இருந்து தெற்கு நோக்கி 23 அடி. இந்த முடிவில் இருந்து தெற்கு நோக்கி 10 அடி. இந்த முடிவில் இருந்து மேற்கு நோக்கி 23அடி. இந்த முடிவில் இருந்து தெற்கு நோக்கி 05 அடி. இந்த முடிவில் இருந்து கிழக்கு நோக்கி 16 1/2 பாகங்கள். எல்லைகள் - வடக்கு : யூ. எல்.அப்துல் மஜீட் மற்றும் ஏ. எம். சித்தி நவீலா மற்றும் கணவர் ; கிழக்கு : குழந்தை உம்மாவின் காணி ; தெற்கு : ஆதம்பாவா மற்றும் ஏ.எம். சித்தி நவீலா மற்றும் கணவரது காணி ; மேற்கு : பிரதான வீதி மற்றும் ஏ. எம். சித்தி நவீலா மற்றும் கணவரது காணி. இது முழுவதுடனுமான வீடு, கிணறு மற்றும் தெங்கு செய்கை மற்றும் அத்துடனான எல்லாம்.

சொல்லப்பட்ட காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வி. ராஜேந்திரனினால் தயாரிக்கப்பட்ட 2010.12.08 ஆந் திகதியிடப்பட்ட ஆர்/644/2010 ஆம் இலக்கத்தைக் கொண்ட விபரங்கள் அண்மையில் நில அளவை செய்யப்பட்டதற்கு அமைவான விபரங்கள் பின்வருமாறு:

இலங்கை குடியரசின், கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மாளிகைக்காட்டில் உள்ள காரைதீவு பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதான வீதியில் உள்ள கொட்டிப்பற்று வளவு என அழைக்கப்படும் பகிரப்பட்ட காணியொன்று எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : அப்துல் மஜீட் மொகமட் ஹ‌ப்ரத்தின் காணி ; கிழக்கு : குழந்தை உம்மாவின் காணி ; தெற்கு : ஏ. எல். ஆதம்பாவா மற்றும் ஏ.எம். சித்தி நபீலா மற்றும் கணவர் ஆகியோரின் காணி ; மேற்கு : வீதி (வீ. அ. அ. ச.) மற்றும் ஏ. எம். சித்தி நவீலா மற்றும் கணவரால் கோரப்படும் நிரந்தரக் கட்டடம். 0.0177 ஹெக்டயார் (0ஏ. 0றூ. 700பே.) விஸ்தீரணமாக கொண்டது.

### இரண்டாவது அட்டவணை

கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டம், கரைவாகுபற்று, காரைதீவு மாளிகைக்காடு மேற்கில் உள்ள ‘வேலியடி இலவிஸ்சம்’ என அழைக்கப்படும் பிரிக்கப்படும் மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணி வடக்கில் இருந்து தெற்கு 41 அடி மற்றும் கிழக்கில் இருந்து மேற்கு 30 அடி விஸ்தீரணத்தைக் கொண்டது. இந்த பிரிக்கப்பட்ட

வடக்கின் பங்கு வடக்கில் இருந்து தெற்கு வரையிலான 31 அடி விஸ்தீரணம். கிழக்கில் இருந்து மேற்கு 30 அடி. வடக்கு காணியின் எல்லைக்கு உட்பட்ட செயினுலாப்டீன் மொகமட் ரிபாயின் காணி, கிழக்கு பிரதான வீதி, தெற்கு : ஏ. எம். அப்துல் ரசாக்கின் காணி மற்றும் மேற்கு : ஏ. ஆர். அப்துல் ரசாக்கின் காணி. இத்துடனான முழுவதுடனுமானதும், அத்துடன் எல்லாவற்றை யும் கொண்டது. (அடகு முறி இலக்கம் 7382 அட்டவணையின் மிகுதி, முறியின் 4 ஆம் பக்கத்தில் உள்ளது) சொல்லப்பட்ட காணி, அண்மை யில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. ராஜேந்திரனினால் நிலஅளவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட 2011.09.10 ஆந் திகதியிடப்பட்ட ஆர்/ 237/2011 விபரங்களை கொண்டதற்கு அமைவான விபரங்கள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டத்தில் உள்ள மாளிகைக்காடு கிராமத்தில் உள்ள காரைதீவு பிரதேச சபைக்கு உட்பட்ட "வேலியடி இலவிசம்" என அழைக்கப்படும் பகிரப்பட்ட காணியொன்று எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : செயினுலாப்டீன் மொகமட் ரிபாயின் காணி ; கிழக்கு : பிரதான வீதி (வீ. அ.அ.ச.); தெற்கு : ஏ. ஆர். அப்துல் ரசாக்கின் காணி ; மேற்கு : ஏ. ஆர். அப்துல் ரசாக்கின் காணி. 0.0086 ஹெக்டயார்கள் (0ஏ. 0றூ. 3.42பே.).

### மூன்றாவது அட்டவணை

கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டம், கரைவாகுப்பற்று, காரைதீவு மாளிகைக்காடு மேற்கில் உள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணி. இந்த பிரிக்கப்பட்ட வடக்கின் பங்கின், வடக்கில் இருந்து தெற்கு நோக்கிய விஸ்தீரணத்தைக் கொண்டது. மேற்கு 13 அடி. வடக்கின் இறுதியினை நோக்கியது ; கிழக்கு : 94 அடி இந்த இறுதியை நோக்கிய 28 1/2 அடியுடனான இறுதியை நோக்கியது ; மேற்கு : 42 அடி, இந்த இறுதியை நோக்கியது ; வடக்கு 15 1/2 அடி இந்த இறுதியை நோக்கியது ; மேற்கு: 52 அடி வடக்கின் எல்லை யூ. எல். அப்துல் மஜீட் மற்றும் ஏனையவர்களது ; கிழக்கு : குழந்தையும்மாவின் காணி ; தெற்கு : குறுக்கு ஒழுங்கை மற்றும் ஏ. எம். மொகமட் தஸ்லீம் மற்றும் மிகுதியான காணி மற்றும் மேற்கு 3 அடி அகலமான ஒழுங்கை மற்றும் பிரதான வீதி. முழுவதுடனான இத்துடனான எல்லாவற்றையும் கொண்டது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. தச்சனாமூர்த்தியினால் தயாரிக்கப்பட்ட 2012.11.01 ஆந் திகதியிடப்பட்ட கே. ரி./72/2012 ஆம் இலக்கத்தைக் கொண்ட சொல்லப்பட்ட காணி அண்மையில் நிலஅளவை செய்யப்பட்டதற்கு அமைவாக விபரங்கள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டத்தில் உள்ள காரைத்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மாளிகைக்காட்டில் உள்ள காரைதீவு பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பிரதான வீதியின் பகிரப்பட்ட காணி எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : வழி ; கிழக்கு : அப்துல் மஜீட் மொகமட் தஸ்லீம் ஷாமிலாவின் காணி ; தெற்கு : அப்துல் மஜீட் மொகமட் தஸ்லீமின் காணியுடனான நிரந்தரக் கட்டடம் ; மேற்கு : வீதி (வீ. அ. அ. ச.) 0.0165 ஹெக்டயார் (0ஏ. 0று. 6.15பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

9- 466/3

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கிளை : கல்முனை
வாடிக்கையாளரின் பெயர் : மொகமட் இப்ரஹீம் சியாரோ மற்றும் மொஹமட் அலியார் ராவிய உம்மா

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2015 ஆம் ஆண்டு யூலை 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"மொகமட் இப்ரஹீம் சியாரோ மற்றும் மொஹமட் அலியார் ராவிய உம்மா கடப்பாடு உடையவர்களாக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், கல்முனை பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். ராகீப்பினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, மே 29 ஆந் திகதியிடப்பட்ட 1416, 1418 மற்றும் 1420 ஆகிய இலக்க முறிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2015, யூன் 23 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது ஒரு கோடியே ஆறு இலட்சத்து நாற்பத்துமூவாயிரத்து ஐநூற்று எழுபத்தாறு ரூபா இருபத்தொன்பது சதம் (ரூ. 1,06,43,576.29) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 1416, 1418 மற்றும் 1420 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டன வுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 1,06,43,576.29 பணத்தொகையை 2015, யூன் மாதம் 24 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

### முதலாவது அட்டவணை

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனையில் உள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியின் கிழக்கு பகுதியின் எல்லைகள் - வடக்கு : வி. நல்லம்மாவின் காணி ; கிழக்கு : கே. கறுவல்தம்பியின் காணி ; தெற்கு : வீதி; மேற்கு : வி. பூபதியின் காணி அத்துடன் அதன் விஸ்தீரணம்: வடக்கிலிருந்து தெற்கு பதினேழு (17) பாகங்கள்: அத்துடன் கிழக்கிலிருந்து மேற்கிற்கு பதினொரு பாகங்கள் (11) அத்துடனான முழுவதுடனுமான சகலதும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் அகமட் எம். மஃரூப்பினால் தயாரிக்கப்பட்ட 2005.08.26 ஆந் திகதியிடப்பட்ட 264/05 ஆம் இலக்க நிலஅளவை வரைபடத்திற்கு அமைவான மேல்குறிப்பிட்ட காணியின் விபரங்கள் பின்வருமாறு:

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள

மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட கல்முனை 03 இல் உள்ள மரியார் வீதியில் உள்ள 71 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள "கிழக்குபுரபங்கு வளவு" என அழைக்கப்படும் பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : வி. நல்லம்மாவின் தோட்டம் ; கிழக்கு : கே. கறுவல்தம்பியின் தோட்டம் ; தெற்கு : மாரியா வீதி ; மேற்கு : தற்போது ஏ. ரவியஉம்மாவின் தோட்டம் என்பதுடன் அதன் விஸ்தீரணம் இருபது தசம் மூன்று பேர்ச் (20.3) அல்லது 0.514 ஹெக்டயார் அத்துடனான முழுவதுடனுமான சகலதும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட மாற்றம் கல்முனை காணிப் பதிவகத்தில் வி17/19 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

### இரண்டாவது அட்டவணை

கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டத்தில் உள்ள கரவாகுபற்றுவில் உள்ள கல்முனை 3 இன் மாரியர் வீதியில் உள்ள வரிமதிபீட்டிலக்கம் 67ஐ கொண்டுள்ள காணி. பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட மேற்கு பகுதியின் எல்லைகள் -வடக்கு : கந்தப்பர் கறுவல்தம்பியின் காணி ; கிழக்கு : யூ. எல்.மொகமட் இப்ராஹீமின் காணி; தெற்கு : வீதி ; மேற்கு: தம்பியின்காணியின் விஸ்தீரணம் வடக்கில் இருந்து தெற்கிற்கு பதினேழு (17) பாகங்கள் மற்றும் கிழக்கில் இருந்து மேற்கு பதினொன்று (11) அத்துடனான முழுவதுமான சகலதும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

முன்சொல்லப்பட்ட காணி, அண்மையில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ்.நேசராஜாவினால் தயாரிக்கப்பட்ட 2014.04.05 ஆந் திகதியிடப்பட்ட எஸ். என்.ஆர்/ 2014/ 1952 நில அளவை வரைபட இலக்கத்திற்கு அமைவான காணியின் விபரங்கள் பின்வருமாறு :

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டத்தில் உள்ள கரவாகுபற்றுவில் உள்ள கல்முனை பிரதேச செயலாளர் பிரிவின் கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட கல்முனை 2 இல் உள்ள மாரியர் வீதியில் உள்ள பகிரப்பட்ட காணியின் எல்லைகள்-வடக்கு: கறுவல்தம்பியின் தோட்டம் ; கிழக்கு: தற்போது ஏ. ரவியஉம்மாவின் தோட்டம் ; தெற்கு: மாரியார் வீதி ; மேற்கு இளையதம்பியின் தோட்டம் மற்றும் அதன் விஸ்தீரணம் இருபத்து நாலு தசம் ஏழு மூன்று பேர்ச் (24.73) அல்லது 0.0625 ஹெக்டயர் அத்துடனான சகலதும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கல்முனை காணிப் பதிவகத்தில் சொல்லப்பட்ட பதிவு வி18/ 48 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### மூன்றாவது அட்டவணை

கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டத்தின் கல்முனை-03 இல் உள்ள 452 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள காணியின் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட மேற்கின் அரைப்பங்கின் எல்லைகள்- வடக்கு : வி.சின்னத்தம்பியின் காணி ; கிழக்கு: எஸ். கலையம்மை மற்றும் எம்.பொன்னம்மா ஆகியோரின் காணி ; தெற்கு: வீதி ; மேற்கு : எஸ். கண்ணப்பர் மற்றும் ஏனையவர்களின் காணி. அத்துடனான விஸ்தீரணம் வடக்கில் இருந்து தெற்கிற்கு பாகம் பதினாறு (16) மற்றும் கிழக்கில் இருந்து மேற்கு பதினொன்று அரை (11 1/2) அத்துடனான சகலதும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

முன்சொல்லப்பட்ட காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சி.பத்மநாதனினால் தயாரிக்கப்பட்ட 2005.11.15 ஆந் திகதியிடப்பட்ட388 ஆம் இலக்க நில அளவை செய்யப்பட்டதற்கு அமைவான விபரங்கள் பின்வருமாறு:

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலகத்தில் உள்ள கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட கல்முனை 2 இல் உள்ள பவுண்டறி வீதியில் உள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 75ஐ கொண்டுள்ள பகிரப்பட்டகாணியன் எல்லைகள் - வடக்கு : வி. சின்னதம்பியின் தோட்டம் ; கிழக்கு : எஸ். கலையம்மை மற்றும் எம். பொன்னம்மா ஆகியோரின் காணி ; தெற்கு: பவுண்டரி வீதி ; மேற்கு: யூ. எம். இப்ராஹீமின் தோட்டம், அத்துடனான விஸ்தீரணம் பதினெட்டு தசம் நான்கு எட்டு பேர்ச் (18.48) அல்லது 0.046741 ஹெக்டயார் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் உள்ளடக்கப்பட்டது.

கல்முனை காணிப் பதிவகத்தில் வி 02/90 இன்கீழ் சொல்லப்பட்ட பதிவு மேற்கொள்ளப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

9- 466/7

---

### ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

மட்டக்களப்பு கிளை
வாடிக்கையாளரின் பெயர் : மக்கி நசிசஸ் பேம்பெக்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"மக்கி நசிசஸ் பேம்பெக் கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், மட்டக்களப்பு பிரசித்த நொத்தாரிசு வீ. வீ. இந்திரனினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, மார்ச்சு 17 ஆந் திகதியிடப்பட்ட 14522, 2009, ஒற்றோபர் 27 ஆந் திகதியிடப்பட்ட 15336, 2010, மே 8 ஆந் திகதியிடப்பட்ட 15650 மற்றும் 2012, நவெம்பர் 2 ஆந் திகதியிடப்பட்ட 17121 ஆகிய இலக் கங்களைக் கொண்ட முறிகள் என்பன மீதான வருமதியான கொடுப் பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2015, ஏப்பிறல் 07 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது அறுபது இலட்சத்து தொண்ணூற்றோராயிரத்து அறுநூற்று பதினேழு ரூபா ஐந்து சதம் (ரூ. 60,91,617.05) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணை களில் முழுமையாக விபரிக்கப்பட்ட 14522, 15336, 15650 மற்றும்

17121 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 60,91,617.05 பணத்தொகையை 2015, ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

**முதலாம் அட்டவணை**

காணி ஒன்று :

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மண்முனை பற்றுவில் உள்ள ஊறணியில் உள்ள 20/5 பி வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள பிரிவு இலக்கம் 11 இல் உள்ள மட்டக்களப்பு மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட செல்வநாயகம் வீதியில் உள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. சிங்கராஜாவினால் தயாரிக்கப்பட்ட 1999.09.05 ஆந் திகதியிடப்பட்ட ஏ. எஸ்./99/1379 ஆம் இலக்க நிலஅளவை வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 03 என விபரமாக விளக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகுதி பத்து பேர்ச் (0ஏ. 0றூ 10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனத்தின் எல்லைகள் - வடகிழக்கு : சொல்லப்பட்ட நில அளவை வரைபட இலக்கம் ஏ. எஸ்./99/1379 இல் உள்ள காணித்துண்டு இலக்கம் 02 ; தென்கிழக்கு : எஸ். மகிபாலனிற்கு சொந்தமான தோட்டம்; வடமேற்கு : செல்வநாயகம் வீதிக்கு செல்லும் ஒழுங்கை ; தென்மேற்கு : சொல்லப்பட்ட கீழே விபரிக்கப்பட்டுள்ள நிலஅளவை வரைபட இலக்கம் ஏ. எஸ்./99/1379 இன் காணி, அத்துடனான எல்லா உரிமைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தொகுதி பி548/259 இல் உள்ள காணித்துண்டு இலக்கம் 04 காணி.

**இரண்டாம் அட்டவணை**

காணி இரண்டு :

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மண்முனை வடக்குப்பற்றில் உள்ள ஊறணியின் 20/5சி வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள பிரிவு இலக்கம் 11 இன் மட்டக்களப்பு மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட செல்வநாயகம் வீதியில் உள்ள உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஏ. சிங்கராஜாவினால் தயாரிக்கப்பட்ட 1999.09.05 ஆந் திகதியிடப்பட்ட ஏ. எஸ்./99/1379 ஆம் இலக்க நிலஅளவை வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 04 என விபரமாக விளக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகுதி பத்து பேர்ச் (0ஏ. 0றூ 10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனத்தின் எல்லைகள் - வடகிழக்கு : மேலே விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட நில அளவை வரைபட இலக்கம் ஏ. எஸ்./99/1379 இல் உள்ள காணித்துண்டு இலக்கம் 03 ; தென்மேற்கு : எஸ். புவனேஸ்வரனினால் உரிமை கோரப்படும் தோட்டத்துடனான வீடு மற்றும் சகல கட்டடம் மற்றும் ஏனைய உரிமைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. தொகுதி : பி548/260 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது இந்த இரு பகிரப்பட்ட காணிகளும் இணைக்கப்பட்டு ஒரே காணியாக, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். அந்தோனிப்பிள்ளையினால் தயாரிக்கப்பட்ட 2006.02.15ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபட இலக்கம் எஸ்.ஏ/2111/2006/எம்.என் இல் ஒரே காணியாக விபரமாக விளக்கப்பட்டுள்ளதன் விஸ்தீரணம் இருபது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20 பே.) இன் எல்லைகள் -வடகிழக்கு : திருமதி எஸ். கனகரத்தினத்திற்கு சொந்தமான ஏ.எஸ்/99/1379 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இலக்கம் 02 ; வடமேற்கு: ஒழுங்கை ; தென்கிழக்கு : எஸ். புவனேஸ்வரனின் காணி ; தென்மேற்கு: சீவரத்தினத்திற்குச் சொந்தமான காணியுடனான கிணறு மற்றும் ஏனைய உரிமைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

9- 466/8

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

சங்கானை கிளை
வாடிக்கையாளரின் பெயர் : பொன்னுத்துரை சூரியகுமார் மற்றும் வசந்தா சூரியகுமார்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"பொன்னுத்துரை சூரியகுமார் மற்றும் வசந்தா சூரியகுமார் கடப்பாடு உடையவர்களாக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு எம். தியாகராஜாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, யூலை 27 ஆந் திகதியிடப்பட்ட 1337 ஆம் இலக்கம் மற்றும் யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு ஜே. சிவராமசர்மாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 248 மற்றும் 338 ஆகிய இரு முறிகள், முறையே 2013, நவெம்பர் 15 மற்றும் 2014, மாச்சு 11 ஆகிய திகதிகள் இடப்பட்ட மற்றும் யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு எம். தியாகராஜாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, பெப்புருவரி 10 ஆந் திகதியிடப்பட்ட14013 ஆம் இலக்க முறி மற்றும் யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு ஜே. சிவராமசர்மாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, பெப்புருவரி 03 ஆந் திகதியிடப்பட்ட304 ஆம் இலக்க முறிகள் என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2015, மாச்சு 04 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது ஒரு கோடியே தொண்ணூற்று ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்து தொளாயிரத்து இரண்டு ரூபா எண்பத்தொரு சதம் (ரூ. 1,91,95,902.81) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான முதலாவது மற்றும் இரண்டாவது அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்ட 13437, 248, 338, 14013 மற்றும்

304 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 1,91,95,902.81 பணத்தொகையை 2015, மாச்சு மாதம் 05 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

### முதலாவது அட்டவணை

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட கைதடி மேற்கு (ஜே/293) இன் கிராம அலுவலர் பிரிவில் உள்ள நாவற்குளி பங்கில் உள்ள கைதடியில் உள்ள மானிப்பாய் வீதியுடன் உள்ள, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. பஞ்சாச்சரத்தினால் தயாரிக்கப்பட்ட 2005.09.17 ஆந் திகதியிடப்பட்ட 344 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1 என விபரமாக விளக்கப்பட்டுள்ள "அம்பலவாணன் கல்லடி வயல் எடுவரக்கல்லடி உயரம், அம்பலவாணன் கல்லடி, அம்பலவாணன் கல்லடி புலம் மருதோன்றி அம்பலவாணன் கல்லடி வயல் மற்றும் புலம்" என அழைக்கப்படும் பகிரப்பட்ட காணியுடனான கட்டடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம் பதினைந்து லாச்சம் வரகு கல்ச்சர் (15Lms VC) இனது எல்லைகள் - வடக்கு : டனியல் சதாசிவம் மற்றும் ஏனையவர்களின் ஆதனம்; கிழக்கு : சின்னதம்பி வெலஊத்தாரின் ஆதனம் ; தெற்கு : வீதி ; மேற்கு : அரச காணி மற்றும் அத்துடனான முழுவதும் யாழ்ப்பாண மாவட்ட காணிப் பதிவகத்தில் தொகுதி /பக்கம் எப்.781/19 இல் பதிவு செய்யப்பட்டது.

பின்வருபவை உட்பட எல்லா அசையாத இயந்திர கருவிக்கலத் தொகுதி சேர்மானங்களும் பொருத்துக்களும்:

1. கிறஷர் பிளாண்ட் மற்றும் பீடர் பக்கற் கொண்வே பெல்ற் மற்றும் மோட்டர்.
2. கிறஷர் பிளாண்டுடன் டீசெல் என்ஜின் மற்றும் மோட்டர்
3. கிறஷர் பிளாண்ட்
4. சிவ்ஸ் 2
5. லோடர்.

### இரண்டாவது அட்டவணை

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட கைதடி மேற்கு (ஜே/293) இன் கிராம அலுவலர் பிரிவில் உள்ள நாவற்குளி பங்கில் உள்ள கைதடியில் உள்ள மானிப்பாய் வீதியின் 118 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. அருள்நேசனினால் தயாரிக்கப்பட்ட 2011.09.12 ஆந் திகதியிடப்பட்ட 1217 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள பகிரப்படட் காணத்துண்டு 1 என விபரமாக விளக்கப்பட்டுள்ள "அம்பலவாணன் கல்லடி தலைமடை வயல் எடுவரக்கல்லடி மற்றும் ஏனைய சிப்பங்கள்" மற்றும் அத்துடனான எல்லாம் பதின்மூன்று லாச்சம் வரகு கல்ச்சர் பத்து தசம் ஒன்று நான்கு குளிகள் (13Lms VC & 10. 14Kls) விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : தாமோதரப்பிள்ளை மற்றும் மனைவி நில்லச்சிப்பிள்ளை ஆகியோரின் ஆதனம் ; கிழக்கு : அரியகுட்டி மற்றும் மனைவி சுகிர்தம் மற்றும் சின்னப்போடி கந்தையா ஆகியோரின் ஆதனம் ; தெற்கு : வீதி ; மேற்கு : பொன்னுத்துரை சூரியகுமாரின் ஆதனம் மற்றும் இத்துடனான முழுவதும் யாழ்ப்பாண மாவட்ட காணிப் பதிவகத்தில் தொகுதி /பக்கம் எப்.823/74 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

9- 466/4

---

### செலான் வங்கி ப.வ.க

(2007 ஆம் ஆண்டிஒன் 7 ஆம்இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கிளை: கல்முனை
கணக்கு இலக்கம்: 0970- 33499841- 001

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் , வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் 2015.07.28 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

"கல்முனையைச் சேர்ந்த மொஹமட் இப்றாஹிம் ஸியாரோ/ மொஹமட் அலியார் ரவியா உம்மா ஆகியோர் கடனெடுத்தவர்கள்' என்ற வகையில் செலன் வங்கி ப.வ.க. ( 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கிணங்க PQ 9 குறியீட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு மூத்ததம்பி கந்தையா பேரின்பராஜா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013 ஓகத்து 6ஆம் திகதிய 1994 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்போது 2014 திசெம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது ஒரு கோடியே நாற்பத்தொன்பது இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து முன்னூற்று அறுபத்து நான்கு ரூபா எழுபத்தேழு சதம் ( 1, 49, 88, 364.77) செலான் வங்கி ப.வ.க. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 1, 49, 88, 364.77 பணத்தொகையையும் 2015 சனவரி 1 ஆந் திகதிமுதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றிற்கு பதினான்கு சதவீதப்படி (14%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக சொல்லப்பட்ட 1994 ஆம் இலக்க முறிகளினால் செலான் வங்கி ப.வ.கம்பனிக்கு ஈடு வைக்கப்பட்டடதும், இதற்கான அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற

ஏலதாரர் திருமதி சந்திமா பிரியதர்ஷனி கமகே என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப.வ.க பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டணை**

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிரதேச செயலகம் மற்றும் மாநகர சபை எல்லைகளினுள் கல்முனைக்குடி - 02 கிராமசேவை அலுவலர் பிரிவில் அமைந்துள்ள "மருதடி வளவு" என்றழைக்கப்படும் ஒரு பெரிய காணியின் ஒரு பங்காயுள்ள ஒரு காணிப்பங்கீடு வடக்கிலிருந்து தென்கிழக்குப் பக்கமாக இருபத்தெட்டு அடி, மேற்குப் பக்கமாக பதினாறு அடி, கிழக்கிலிருந்து மேற்காக நூற்றம்பத்து மூன்று அடி ( வ-தெ-கிழக்குப் பக்கம் 28 அடி, மேற்குப் பக்கம் 16 அடி, கி-மே- 153 அடி) இதன் எல்லைகள் - வடக்கு மற்றும் தெற்கு: எம். ஐ. எம். காசிமுக்குச் சொந்தமான காணி; கிழக்கு : கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதி; மேற்கு: போடியார் குளம் மற்றும் ஒதுக்கம். இது முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும். இது கல்முனை காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் K 96/36 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ் . நேசராஜாவால் தயாரிக்கப்பட்ட 2013.06.13 ஆந் திகதிய அண்மைக்கால நிலஅளவை வரைபடத்தின்படி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிரதேச செயலக மற்றும் மாநகரசபை எல்லைகளினுள் கல்முனைக்குடி- 04 இல் இல. 646 மற்றும் 648 கொண்டதாக அமைந்துள்ள 'மருதடி வளவு" என்றழைக்கப்படும் ஒரு காணிப் பங்கீடு, இது பதின்மூன்று தசம் இரண்டு பூச்சியம் பேர்ச்சு (0ஏ. 0றூ. 13.20பே.) அல்லது 0.0334 ஹெக்டேயர் விஸ்தீரணம் கொண்டது. இதன் எல்லைகள்- வடக்கு மற்றும் தெற்கு: எம். ஐ. எம். காசிம் உரிமை கோரும் காணி; கிழக்கு: வீதி; மேற்கு: போடியார் குளம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) கே. ஹற்ச்,
உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்.

9-444/1

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கிளை : கல்முனை
வாடிக்கையாளரின் பெயர் : சயீட் இப்ரஹீம் அன்வர்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2015 ஆம் ஆண்டு யூலை 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"சயீட் இப்ரஹீம் அன்வர் கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், நிந்தவூர் பிரசித்த நொத்தாரிசு எஸ்.முத்துமீரானினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, மாச்சு 12 ஆந் திகதியிடப்பட்ட 7569 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2015, ஏப்பிறல் 21 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது எண்பது இலட்சத்து தொண்ணூறாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று மூன்று ரூபா நான்கு சதம் (ரூ. 80,90,693.04) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளது.

"சயீட் இப்ரஹீம் அன்வர் கடப்பாடு உடையவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், நிந்தவூர் பிரசித்த நொத்தாரிசு எஸ்.முத்துமீரானினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, மாச்சு 12 ஆந் திகதியிடப்பட்ட 7569 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2015, ஏப்பிறல் 21 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது இரண்டு கோடியே நாற்பத்தெட்டு இலட்சத்து ஆறாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தாறு ரூபா எழுபத்திரண்டு சதம் (ரூ. 2,48,06,956.72) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளது.

அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 7569 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 3,28,97,649.76 பணத்தொகையை 2015, ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

**அட்டவணை**

உறுதி இலக்கம் 13865

கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்றுவில் உள்ள ரி. பீ. 51 இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள 951 இலக்க காணித்துண்டு என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணி ரோட்டரி காண்டம் தெங்கு பெருந்தோட்டம் என அழைக்கப்படும் ஏனைய காண்டத்துடன் இணைக்கப்பட்டதன் எல்லைகள் பிரிக்கப்பட்ட வடக்கு அரைப்பங்கின் விஸ்தீரணம் வடக்கில் இருந்து தெற்காக 40 1/2 அடி, கிழக்கில் இருந்து மேற்கிற்கு 192 அடி

எல்லைகள் வடக்கு: ஜலீலின் காணி ; கிழக்கு : ஏ. எல். மொகமட் இஸ்மயிலின் காணி ; தெற்கு : ஏ. எல். சுஹேப் மற்றும் ஏனையவர்களது காணி ; மேற்கு : பிரதான வீதி. இத்துடனான எல்லாவற்றுடன், அத்துடனான எல்லாவற்றையும் கொண்ட ஆதனம், கல்முனை காணிப் பதிவகத்தில் பக்கம் எம் 245/32 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

உறுதி இலக்கம் 3614

காணித்துண்டு 1: மேற்சொல்லப்பட்ட அதேகாணியின் கிழக்கு பங்கின் விஸ்தீரணம் வடக்கில் இருந்து தெற்கிற்கு 14 பாகங்கள். கிழக்கில் இருந்து மேற்கிற்கு 15 பாகங்கள் பிரிக்கப்பட்ட மேற்கு பங்கின் விஸ்தீரணம் வடக்கில் இருந்து தெற்கிற்கு 84 அடி மற்றும் கிழக்கில் இருந்து மேற்கு, கிழக்கை நோக்கி 56 அடி மற்றும் தெற்கை நோக்கி 57 அடி. எல்லைகள் - வடக்கு : ஐ. நெயீமாவின் காணி ; கிழக்கு : திருமதி சியானா தௌபீக்கின் காணி ; தெற்கு : எஸ். ஏ. ஜசாரின் காணி மற்றும் ; மேற்கு : ஏ. எல். பெய்ரூசின் காணி.

காணித்துண்டு 2: அத்துடன் முன் சொல்லப்பட்ட அதே காணி ஒன்றிணைக்கப்பட்டதுடன் பிரிக்கப்பட்டது. தென்மேற்கு மூலையின் விஸ்தீரணம் வடக்கில் இருந்து தெற்காக 02 பாகங்கள். கிழக்கில் இருந்து மேற்கு 17 பாகங்கள் எல்லைகள் - வடக்கு : ஏ. எல். பெய்ரூஸின் காணி; கிழக்கு : காணித்துண்டு 1 ; தெற்கு : வழங்கப்பட்ட காணி ; மேற்கு : பிரதான வீதி. இத்துடனான முழுவதும் அத்துடனான எல்லாவற்றையும் முழுவதுடனும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்டது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஏ. மொகமட் தஸ்லீமினால் தயாரிக்கப்பட்ட 2011.10.10 ஆந் திகதியிடப்படட்ட அண்மைய நில அளவை மற்றும் விபரங்களை ரி/ 1434/ ஏ ஐ விபரமாக கொண்டுள்ளதற்கு அமைவான சொல்லப்பட்ட பகிரப்பட்ட காணி குறித்து பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை, பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அட்டாளைச்சேனை பிரதேச சபையின் அட்டாளைச்சேனைக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை 14 கிராமத்தில் உள்ள ஆதனத்துடனான காணி. சட்டத்தரணி ஏ. சி. கசுடீனினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011.03.02 ஆந் திகதிய 3614 ஆம் இலக்க உறுதி மற்றும் சட்டத்தரணி ஏ. எம். நூர்தீனினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.03.31 ஆந் திகதிய 13865 ஆம் இலக்க உறுதி என்பனவற்றில் உள்ள அட்டவணை இலக்கம் 1 மற்றும் 2 இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிலஅளவை செய்யப்பட்ட காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : ஏ. எல். பெய்ரூஸ், ஐ. நேயீமா மற்றும் சியன்ன தௌபீக் ஆகியோரின் காணி ; கிழக்கு : சியன்ன தௌபீக் மற்றும் ஏ. எல். இஸ்மயில் மற்றும் ஏனையவர்களின் காணி ; தெற்கு : ஏ. எல். சுகைப் மற்றும் ஏனையவர்களின் காணி; மேற்கு : பிரதான வீதி. 0.124 ஹெக்டயர்கள் (0ஏ. 1றூ. 8பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணி.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

9- 466/5

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

கிளை : திருகோணமலை
வாடிக்கையாளரின் பெயர் : விக்னேஸ்வரராஜா பிரகாஷ்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2015 ஆம் ஆண்டு யூலை 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

''விக்னேஸ்வரராஜா பிரகாஷ் கடப்பாடு உடையவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில், திருகோணமலை பிரசித்த நொத்தாரிசு ரி. துஷ்யந்தனினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, சனவரி 30 ஆந் திகதியிடப்பட்ட 2657 ஆகிய இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2015, யூன் 08 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஒரு கோடியே இருபத்தொரு இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து நூற்று முப்பத்து நான்கு ரூபா எழுபத்திரண்டு சதம் (ரூ. 1,21,93,134.72) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 2657 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 1,21,93,134.72 பணத்தொகையை 2015, யூன் மாதம் 09 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''.

**முதலாவது அட்டவணை**

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசத்திற்கு உட்பட்ட பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட, திருகோணமலை நகர சபை எல்லைக்கு உட்பட்ட பெருந்தெரு 244 எல் கிராம அலுவலர் பிரிவிற் உட்பட்ட பிரிவு இலக்கம் 7, பகுதி இலக்கம் 08 ''பசார்'' இல் உள்ள திருகோணமலை, ஏகாம்பரம் வீதி, 107 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள ஆதனம் திருகோணமலை, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். வேலுப்பிள்ளையினால் வரையப்பட்ட 1968.06.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 52 இன் ''காணித்துண்டு ஏ'' என அடையாளம் இடப்பட்ட, பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட ஆதனத்துடனான கட்டடங்கள் மற்றும் திருகோணமலை உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். வேலுப்பிள்ளையினால் வரையப்பட்ட 1968.06.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 52 இல் உள்ள ''காணித்துண்டு ஈ'' என அடையாளம் இடப்பட்ட பாதையினை உபயோகிக்கும் உரிமையுடன் ஏனைய உரிமைகளைக் கொண்ட ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : ஏகாம்பரம் வீதி ; கிழக்கு: திருகோணமலை உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ்.

வேலுப்பிள்ளையினால் வரையப்பட்ட 1968.06.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 52 இல் உள்ள காணித்துண்டு பி ; தெற்கு : ஒழுங்கை; மேற்கு : திருகோணமலை முத்துக்குமாரசாமி கோவிலினால் உரிமை கோரப்படும் ஆதனம். இரண்டு தசம் மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 2.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனம். திருகோணமலை காணிப் பதிவவகத்தில் தொகுதி/பக்கம் ஏ 32/72 இல் பதிவு செய்யப்பட்டது.

### இரண்டாவது அட்டவணை

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசத்திற்கு உட்பட்ட பிரதேச செலயாளர் பிரிவிற்கு உட்பட்ட, திருகோணமலை நகர சபை எல்லைக்கு உட்பட்ட பெருந்தெரு கிராம அலுவலர் பிரிவு 244 எல் உட்பட்ட இலக்கம் 7, பகுதி இலக்கம் 08 "பசார்" இல் உள்ள திருகோணமலை, ஏகாம்பரம் வீதி, 107 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள ஆதனம் திருகோணமலை, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். வேலுப்பிள்ளையினால் வரையப்பட்ட 1968.06.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 52 இன் "காணித்துண்டு பி" என அடையாளம் இடப்பட்ட, பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட ஆதனத்துடனான கட்டடம் மற்றும் திருகோணமலை உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். வேலுப்பிள்ளையினால் வரையப்பட்ட 1968.06.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 52 இல் உள்ள "காணித்துண்டு ஈ" என அடையாளம் இடப்பட்ட பாதையினை உபயோகிக்கும் உரிமையுடன் ஏனைய உரிமைகளைக் கொண்ட ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : ஏகாம்பரம் வீதி ; கிழக்கு: திருகோணமலை உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். வேலுப்பிள்ளையினால் வரையப்பட்ட 1968.06.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 52 இல் உள்ள காணித்துண்டு பி, வல்லிபுரம் கந்தசாமியின் மனைவி ரத்தினத்திற்குச் சொந்தமானது ; தெற்கு : ஒழுங்கை ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 52 இல் உள்ள காணித்துண்டு ஏ. மூன்று தசம் மூன்று சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 3.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனம். திருகோணமலை காணிப் பதிவவகத்தில் தொகுதி/பக்கம் ஏ 32/73 இல் பதிவு செய்யப்பட்டது.

முன்சொல்லப்பட்ட இரண்டு பகிரப்பட்ட காணிகள் இணைக்கப்பட்டு திருகோணமலை உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். பொன்னுசாமியினால் வரையப்பட்டு 1992.07.19 ஆந் திகதியிடப்பட்ட 1652 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள "காணித்துண்டு 1" என விபரமாக விளக்கப்பட்டுள்ளது. தற்போது திருகோணமலை ஏகாம்பரம் வீதியின் 105 மற்றும் 107 ஆம் வரிமதிபீட்டிலக்கத்தை கொண்டுள்ள ஆதனம். கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசத்தின் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள திருகோணமலை நகர சபை எல்லைக்குஉட்பட்ட, பெருந்தெரு 244எல் கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட பகுதி இலக்கம் 08 இல் உள்ள பிரிவு இலக்கத்துடனான கட்டடம் மற்றும் திருகோணமலை உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். வேலுப்பிள்ளையினால் வரையப்பட்ட 1968.06.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 52 இல் உள்ள "காணித்துண்டு ஈ" என அடையாளம் இடப்பட்ட பாதை என அடையாளம் இடப்பட்ட பாதையினை உபயோகிப்பதற்கான உரிமையைக் கொண்ட ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : முத்துக்குமாரசாமி கோவிலினால் உரிமைகோரப்படும் ஏகாம்பரம் வீதியின் 109 ஆம் வரிமதிப்பீட்லக்கத்தைக் கொண்ட ஆதனம் மற்றும் ஏகாம்பரம் வீதி ; கிழக்கு : ஏகாம்பரம் வீதி மற்றும் காலஞ்சென்ற எஸ். தியாகராஜாவின் வாரிசுகளால் உரிமை கோரப்படும் ஏகாம்பரம் வீதியின் 103 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள ஆதனம் (1968.06.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 52இல் உள்ள காணித்துண்டு சி. காணித்துண்டு பி இன் பகுதி) ; தெற்கு: காலம் சென்ற எஸ். தியாகராஜாவின் வாரிசுகளினால் உரிமைகோரப்படும் ஏகாம்பரம் வீதியின் வரிமதிப்பீட்டிலக்கம் 103 ஐக் கொண்டுள்ள ஆதனம் (உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். வேலுப்பிள்ளையினால் வரையப்பட்ட 1968.06.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 52 இல் உள்ள காணித்துண்டு ஈ) மற்றும் பாதைக்கான வழி; மேற்கு: பாதைக்கான வழி (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். வேலுப்பிள்ளையினால் வரையப்பட்ட 1968.06.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 52 இல் உள்ள காணித்துண்டு ஈ). ஆறு தசம் ஐந்து இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 6.52பே.).

### மூன்றாவது அட்டவணை

கிழக்கு மாகாணம், திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசத்திற்கு உட்பட்ட பிரதேச செலயாளர் பிரிவிற்கு உட்பட்ட, திருகோணமலை நகர சபை எல்லைக்கு உட்பட்ட பெருந்தெரு 244எல் கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட பிரிவு இலக்கம் 7. பகுதி இலக்கம் 08 "பசார்" இல் உள்ள ஆதனம். திருகோணமலை, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். வேலுப்பிள்ளையினால் வரையப்பட்ட 1968.06.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 52 இன் "காணித்துண்டு ஈ" என அடையாளம் இடப்பட்ட, பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியுடனான கட்டடம் அத்துடன் ஏனைய அனைத்து உரிமைகளையும் கொண்ட ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு: திருகோணமலை உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். வேலுப்பிள்ளையினால் வரையப்பட்ட 1968.06.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 52 இல் உள்ள காணித்துண்டு ஏ. பி மற்றும் சி ; கிழக்கு : திருகோணமலை உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். வேலுப்பிள்ளையினால் வரையப்பட்ட 1968.06.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 52 இல் உள்ள காணித்துண்டு டி ; தெற்கு : ஒழுங்கை ; மேற்கு : முத்துக்குமாரசாமி கோவிலின் காணி ; சைபர் தசம் ஆறு சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 00.60பே.) விஸ்தீரணமானதும், திருகோணமலை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஏ 32/299 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி.பொ.மு.(சட்டம்) /சபைச் செயலாளர்.

9- 466/6

---

### செலான் வங்கி ப.வ.க

(2007 ஆம் ஆண்டிஒன் 7 ஆம்இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கிளை: காத்தான்குடி
கணக்கு இலக்கம்: 0740 02634242 - 001

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் , வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் 2015.08.10 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில்

பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

"காத்தான்குடியில் A 279 என்ற பதிவிலக்கம் கொண்டதாக ஓகஸ் என்ரபிறைசஸ் என்றபெயர் மகுடம் மற்றும் நிறுவனத்தின் கீழ் உரிமையாண்மை வியாபாரம் நடத்துகின்ற காத்தான்குடியைச் சேர்ந்த மொஹமட் சரவுதீன் மொஹமட் ஹரூன் "கடனெடுத்தவர்' என்ற வகையில் செலன் வங்கி ப.வ.க. (2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கிணங்க PQ 9 குறியீட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு என். சி. யட்டிகமமனவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012 யூன் 29 ஆந் திகதிய 166 ஆம் இலக்க மற்றும் 2013, திசெம்பர் 3 ஆந் திகதிய 240, பிரசித்த நொத்தாரிசு வி.வினோபா அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, சனவரி 8 ஆந் திகதிய 16628, 2013, நவெம்பர் 22 ஆந் திகதிய 17561 மற்றும் 17562 மற்றும் 2013, திசெம்பர் 16 ஆந் திகதிய 17587 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்போது 2015, பெப்புருவரி 2 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின் மீது பதினொரு கோடியே முப்பத்தைந்து இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எழுநூற்று எழுபது ரூபா நாற்பத்தைந்து சதம் (11,35,44,770.45) செலான் வங்கி ப.வ.க. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 11,35,44,770.45 பணத்தொகையையும் 2015 பெப்புருவரி 3 ஆந் திகதிமுதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றிற்கு பதினைந்து சதவீதப்படி (15%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக சொல்லப்பட்ட 166, 240, 16628, 17561, 17562 மற்றும் 17587 ஆம் இலக்க முறிகளினால் செலான் வங்கி ப.வ.கம்பனிக்கு ஈடு வைக்கப்பட்டதும், இதற்கான முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப.வ.க பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### முதலாவது அட்டணை

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டத்தில், தமன்கடுவை பிரதேச செயலகப் பிரிவின் மெத பத்துவவில் மனிக்கம்பட்டிய கிராமத்தில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. டபிள்யூ. எல் எல். காமினியால் தயாரிக்கப்பட்ட 2011.03.05 ஆந் திகதிய PO/2011/3/01 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 என குறிக்கப்பட்டுக் காட்ட்ப்பட்டதுமான செம்புக்கடுயாய இடம் என்றழைக்கப்படும் ஒரு காணிப்பங்கீடு இதன் எல்லைகள் - வடக்கு : மனிக்கம்பிட்டிய வீதி (பி.ச.) மற்றும் செம்புக்கடு யாய இடம் ; கிழக்கு : ஏ. பி. எம். முஸ்தபாவின் செம்புக்கடு யாய இடம காணி வரைபடம் இல. PO/2010/ 10/ 02 இல் துண்டு 2 அத்துடன் வரைபடம் இல. 1398 இல் துண்டு 02 மற்றும் 3 இன் பகுதி ; தெற்கு : வீதி (பி. ச. ) ; மேற்கு : மனிக்கம்பட்டிய வீதி (பி.ச.), (6ஏ. 2றூ. 17.02பே.) விஸ்தீரணம் கொண்ட இது அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், பயிர்கள் மற்றும் எல்லாவற்றுடனும்.

### இரண்டாவது அட்டணை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைப் பத்துவில், வரிமதிப்பீட்டு இல. 8 இப்போது 8/ 1 கொண்டதாக காத்தான்குடி நகர சபை எல்லைகளினுள் கப்புரடி வீதியில் பிரிவு 1 இல் காத்தான்குடி கிராமத்தில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. சிங்கராஜாவால் தயாரிக்கப்பட்ட 2001.01.17 ஆந் திகதிய AS/2001/ 736 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீட்டின் பிரித்து வரையறுக்கப்பட்ட மேற்குப் பங்கு முழுவதும். இது மீள அளவிடப்பட்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. சிங்கராஜாவால் தயாரிக்கப்பட்ட 2011.10.14 ஆந் திகதிய AS/11/ KAT/ 232 ஆம் இலக்க வரைபடத்தில் விவரிக்கப்பட்டவாறு நான்கு தசம் ஒன்பது நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 4.94பே.) அல்லது 0.0125 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்டது. இதன் எல்லைகள் வடக்கு : முஹமட் இஸ்மாயில் ஹாஜியாரின் காணி ; கிழக்கு: எம். ஐ. அப்துல் காதரினதும் மனைவியினதும் காணி ; தெற்கு: ஏ. சி. ரபீக்கா லெப்பையினதும் மனைவியினதும் காணி மற்றும் ஒழுங்கை முகப்பு ; மேற்கு : எம். எம். எச். ஏ. இப்ராஹீமின் காணி ; இது அதன்கண்ணுள்ள கட்டடத்துடனும் கிணற்றுடனும் எல்லா உரிமைகளுடனும்.

### மூன்றாம்அட்டணை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் பி. செ.பிரிவில் காத்தான்குடி நகர சபை எல்லைகளினுள் வரிமதிப்பீட்டு இல. 93/5 கொண்டதாகக் கடற்கரை வீதியில் இப்போது வட்டாரம் - 3, பிரிவு - 6, காத்தான்குடி கி. சே. பிரிவு, காத்தான்குடி கிராமத்தில் அமைந்துள்ள "வேம்புமதிலடி வளவு" மற்றும் "நாவலடி வளவு" என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். நாகலிங்கத்தால் தயாரிக்கப்பட்ட2001.04.04 ஆந் திகதிய SN/01/4722 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 1 மற்றும் துண்டு இல. 24 என்று காட்டப்பட்ட இரு துண்டுகளைக் கொண்டதுமான ஒரு காணிப்பங்கீடு.கிழக்கு 39 அடி வடக்கு 120 அடி மேற்கு 44 அடி தெற்கில் தென்மேற்கு முனையிலிருந்து கிழக்காக 55 அடி இம் முனையிலிருந்து வடக்காக 5 அடி இம்முனையிலிருந்து கிழக்காக 65 அடி விஸ்தீரணம்கொண்ட இது மீள அளவையிடப்பட்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளரும் மட்டம் பார்ப்பவருமான ஏ. ஏ. சிங்கராஜாவால் தயாரிக்கப்பட்ட 2013.07.25 ஆந் திகதி அளவிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. AS/2013/ 150C ஆம் துண்டு இலக்க 1 என மேலும் விவரிக்கப்பட்டுக் காட்டப்படுகின்றது. இருபது பேர்ச் (0ஏ. 0றூ. 20பே.) அல்லது 0.0606 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட இதன் எல்லைகள் - வடக்கு : இப்றாலெப்பைக்கும் ஏனையோருக்கும் சொந்தமான காணிகள் ; கிழக்கு : ஏ. எல். எம். இஷாக்கின் உரித்தாளிகளுக்குச் சொந்தமான தோட்டம் ; தெற்கு : வரைபடம் இல. SN/01/4722 இல் துண்டு 2 எம். ஐ. எம். முனீருக்குச் சொந்தமானது; மேற்கு : மூபினாவுக்குச் சொந்தமான காணி. முழுக் காணியிலிருந்தும் 12 அடி அகலமான பொதுப் பாதை விடப்பட்டுள்ளது மற்றும் வரைபடம் இல. SN/01/4722 இல் துண்டு இல. 23 சலீமின் உரித்தாளிகளுக்குச் சொந்தமானது. இது அதற்குரித்தான எல்லா உரிமைகளுடனும்.

### நான்காம் அட்டணை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பி. செ. பிரிவில் காத்தான்குடி நகர சபை எல்லைகளினுள் வரிமதிப்பீட்டு இல. 170 கொண்டதாக, புதிய கடற்கரை வீதியில் பிரிவு - 6, காத்தான்குடி கி. சே. பிரிவு, காத்தான்குடி கிராமத்தில் அமைந்துள்ள "ஆலையனோடை வளவு", "மக்கடியான் ஓடை வளவு", "பலக்கைவெட்டை மக்கடியான் ஓடை வளவு" என்றழைக்கப்படும் காணிகளிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். நாகலிங்கத்தால் தயாரிக்கப்பட்ட 1998.02.26 ஆந் திகதிய SN/98/3717 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 6 மற்றும் துண்டு இல. 5 இன் வடக்கு அரைப்பங்கு எனக் காட்டப்பட்டவற்றைக் கொண்டதுமான ஒரு காணிப்பங்கீடு.

வடக்கிலிருந்து தெற்காக 42 அடி கிழக்கிலிருந்து மேற்காக வடக்கில் 142 அடி தெற்கில் 153 அடி விஸ்தீரணம் கொண்ட இது மீள அளவிடப்பட்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளரும் மட்டம் பார்ப்பவருமான ஏ. சிங்கராஜாவால் 2013.07.25 ஆந் திகதி அளக்கப்பட்ட வரைபடம் இல. AS/2013/150A ஆம் துண்டு இலக்க 1 எனமேலும் விவரிக்கப்பட்டுக் காட்டப்படுகின்றது. இருபத்திரண்டு தசம் ஏழு நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 22.74பே.) அல்லது 0.0575 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட இதன் எல்லைகள் - வடக்கு : முழுக் காணியிலிருந்தும் 8 அடி அகலமான பாதை ; கிழக்கு : புதிய கடற்கரை வீதி ; தெற்கு : எஞ்சிய பகுதி எம்.ஐ. எம். காசிமுக்குச் சொந்தமான ; மேற்கு : எம். ஐ. எம். காசிமிமுக்குச் சொந்தமான காணி. அதற்குரித் தான எல்லா உரிமைகளுடனும்.

### ஐந்தாம் அட்டணை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி கி. சே. பிரிவில் காத்தான்குடி நகர சபை எல்லைகளினுள் வரிமதிப்பீட்டு இல. 7 கொண்டதாக, ரச ஆலிம் வீதியில் பிரிவு - 6 இப்போதுவட்டாரம் 6 காத்தான்குடி கிராமத்தில் அமைந்துள்ள "பனையடி தோன கண்டம்" என்றழைக்கப்படும் காணிப்பங்கீட்டிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்ட மேற்குப் பங்கு. வடக்கிலிருந்து தெற்காக 6 பாதம் கிழக்கிலிருந்து மேற்காக வடக்கில் 8 பாதம் தெற்கில் 7 1/2 பாதம் விஸ்தீரணம் கொண்ட இது மீள அளவிடப்பட்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளரும் மட்டம் பார்ப்பவருமான ஏ. சிங்கராஜாவால் 2013.07.25 ஆந் திகதி அளக்கப்பட்ட நில அளவை வரைபடம் இல. AS/2013/150B இல் துண்டு இல. 1 என மேலும் விவரமாகக் காட்டப் படுகின்றது. ஆறு தசம் நான்கு நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 06.44பே.) அல்லது 0.0163 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட இதன் எல்லை கள்- வடக்கு : பாரூக்குக்குச் சொந்தமான காணி ; கிழக்கு : சாஹுல் ஹமிட் ஜொஹாரா உம்மாவின் தோட்டம் ; தெற்கு : 3 1/2 அடி அகலமான ஒழுங்கை ; மேற்கு : வீதி. இது அதன் கண்ணுள்ள கட்டடத்துடனும் எல்லா உரிமைகளுடனும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) கே. ஹற்ச்,
உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்.

9-444/2

---

## சம்பத் வங்கி பீ. எல். சீ.

( முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

### 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

எச்.ரீ. என். டீ. பீரிஸ்
கணக்கு இல.: 0095 5000 3365

2015, ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு 02, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. ஏ. டீ. சுபசிங்ஹ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, மாச்சு 19 ஆந் திகதியிடப்பட்ட இல. 1589 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டவர் எனும் வகையில் கடமைப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஹேவா தந்திரிகே நிஹால் தம்மிக பீரிஸ் என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் தொண்ணூற்று ஒரு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து நாநூற்று ஐம்பத்தாறு ரூபா ஐந்து சதம் (ரூ. 91,68,456.05) 2015, மாச்சு 18 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட தொண்ணூற்று ஒரு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து நாநூற்று ஐம்பத்தாறு ரூபா ஐந்து சதம் (ரூ. 91,68,456.05) 2015, மாச்சு 19 ஆந் திகதி முதல் இல. 1589 எனும் ஈட்டு முறியின்மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எண்பத்திரண்டு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து எழுநூற்று இருபத்து மூன்று ரூபா எண்பது சதம் (ரூ. 82,66,723.80) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 1589 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

வடமத்திய மாகாணம், குருநாகல் மாவட்டம், உடுகாஹா வடக்கு கோரளேயின் தம்பதெனிய ஹத்பத்துவையின் நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவின் அத்துருவலை இல. 1038 எனும் கிராம அலுவலர் பிரிவின் அத்துருவலை மற்றும் தெலிக்கனுவ கிராமங்களில் அமைந்த அத்துருவல தோட்டம் என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். டபிள்யூ. ஐ. ஜயசேகர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, யூன் 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 502/2011 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடகிழக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. அபேகோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட1987, ஒகத்து 05 ஆந் திகதியிடப்பட்ட 1129 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 (15 அடிகள் அகல வீதிக்கான ஒதுக்கம்) ; தென்கிழக்கு : கூறப்பட்ட 1129 எனும் வரைபடத்தின் காட்டப்படட லொட் 5 (தயானந்த வீரசிங்க என்பவர் உரிமைகோரும் காணி); தென்மேற்கு : கூறப்படட 1129 எனும் வரைபடத்தின் லொட் 12 மற்றும் கூறப்பட்ட 1129 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 13 (தயானந்த சமன் தென்னகோன் என்பவர்கள் உரிமைகோரும் காணி) ; வடமேற்கு : கூறப்பட்ட 1129 எனும் வரைபடத்தின் லொட் 3 (நிமல் ஜயரத்ன என்பவர் உரிமைகோரும் காணி) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க

உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 502/2011 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்..

கூறப்பட்ட அத்துருவலை கிராமத்தில் அமைந்த அத்துருவல தோட்டம் என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. அபேக்கோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1987, ஓகத்து 15 ஆந் திகதியிடப்பட்ட இல. 1129 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 4 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடகிழக்கு : லொட் 1 (வீதி) ; தென்கிழக்கு : இங்கு லொட் 5 ; தென்மேற்கு: லொட்கள் 12 மற்றும் 13 மற்றும் ; வடமேற்கு : லொட் 3 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் ஒரு றூட் (0ஏ. 1று. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1129 எனும் வரைபடத்திற்கு அமைவாக குளியாபிட்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் T34/60 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

குருப் கம்பனிக் குழுமச் செயலாளர்.

9-454